## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 10. ஸ்ரீஜெயதேவர்

---

**மறுக்கப்பட்ட மாபெரும் இலக்கியங்கள்**

பாரத தேசத்தின் மிக முக்கியமான இலக்கியங்களில் ஒன்று ஸ்ரீஜெயதேவர் அருளிய கீதகோவிந்தம். அழகிய சம்ஸ்க்ருத மொழியில் ஸ்ரீராதாக்ருஷ்ண ச்ருங்கார லீலைகளை தெய்வீகக் காதல்-காம இலக்கியமாக அவர் அருளினார்.

வெறும் உடல் காமத்தையே பாடுபொருளாகக் கொண்ட காலத்தில் ஸ்ரீஜெயதேவர் போன்றோர் மனிதக் காதலையும் உடல் காமத்தையும் தெய்வீகக்காதல்-காமமாகக் காணக் கற்றுக் கொடுக்கும் பணியைச் செய்தனர்.அவருக்கு முன் வாழ்ந்த தென்னகத்து ஆழ்வார்களும் நாயன்மார்களும் அதற்கு வித்திட்டுச் சென்றார்கள்.

ஆனால் பல காரணங்களை முன்னிட்டு ஒரு காலகட்டத்தில் இவரது கீதகோவிந்தம் கோயில்களில் மறுக்கப்பட்டன.ஏன் ஸ்ரீமத் இராமானுஜர் வாழ்ந்த 11ஆம் நூற்றாண்டில் கூட ஸ்ரீஆண்டாளின் பாடல்களை ஸ்ரீரங்கத்தில் மறுத்த வரலாற்றை ஆராய்ச்சியில் அறிகிறோம்.

தெய்வீகம் என்ற பெயரில் மீண்டும் மனித மனித மனதை உடல் இச்சைக்குத் தூண்டுபவை இவர்தம் இலக்கியங்கள் என்று பல ஆச்சாரியர்கள் வழக்காடிய காலம் அது.ஆனால் அதை எல்லாம் மீறி இன்று அவ்விலக்கியங்கள் இன்று மக்கள் இடையே ப்ரபலம் ஆகி விட்டன.காரணம் அவற்றுள் இருக்கும் உண்மையான பக்தி, கலப்படம் இல்லாத தெய்வக் காதல்.

**எதுவுமே வேண்டாத அன்பர்கள்**

ஒரிசாவில் பூரி ஜகன்நாத க்ஷேத்ரம்.
அதன் அருகில் இருக்கும் அழகிய கிராமம் தான் பில்வகாம்.
அவ்வூரில் வாழ்ந்த ஒரு தூய பக்தரே ஸ்ரீநாராயண சாஸ்த்ரி - கமலாபாய் தம்பதி ஆவர்.
சதா பாகவதம், ஹரிகதை, நாம சங்கீர்த்தனம் செய்தும், அதைப் பரப்பியும் மக்களிடையே பக்தியையும் ஆன்மீக விழிப்புணர்வையும் இவர்கள் ஏற்படுத்தி வருகிறார்கள். எதையுமே தெய்வத்திடம் வேண்டாத தன்மையினர்.

நமக்குத் தெரிந்து ஓர் அன்பர் இருக்கிறார்.அவர் கல்யாண வயதைத் தாண்டும் இளைஞர்.அவர் மிகவும் நல்லவர், இறை நம்பிக்கை உடையவர்.***"உங்களுக்கு விரைவில் இல்லறம் அமைய வேண்டிக் கொள்ளுங்கள்!"*** என்போம்.அதற்கு

***அவர்,"அதை இறைவன் அருளினால் சந்தோஷம், இல்லை என்றாலும் சந்தோஷம்!"*** என்பார். இது பக்தியில் ஒரு வகை.

இத்தம்பதியினர் பல காலம் கடந்தும் தங்களுக்கு ஒரு குழந்தை இல்லையே என்று சற்று கூட வருந்தவில்லை.அதாவது அந்த எண்ணமே அவர்களுக்கு இல்லையாம்.ஆனால் காலப்போக்கில் கமலாபாய் அதைப் பற்றிச் சிந்திக்கிறார்.அமைதியாய் இறைவனிடம் மகப்பேற்றினை வேண்டி வழிபட்டாராம்.அதன் விளைவு, உலகமஹா தெய்வீகக்கவிகளுள் ஒருவரான ஸ்ரீஜெயதேவரின் பிறப்பு!

ஆனால் தெய்வத்திடம் தன் மனைவி ஒரு குழந்தையை வேண்டியதை எண்ணி அவர் கணவன் வருந்துகிறார்.***"அடே! அழியும் பொருளையா வேண்டுவது? முக்தியையும், அதற்கு உரிய பக்தியையும் ஞானத்தையும் அல்லவா வேண்டி இருக்க வேண்டும்?"*** என்று அங்கலாய்த்திருக்கிறார்.

**கர்ப்ப கால சங்கல்பம்**

தன் கணவனின் வருத்தம் நியாயமானதே என்று கமலாபாய் உணர்கிறார்.தாம்பத்தியத்தில் அவரையே குருவாகக் கொண்டு வாழ்ந்து இதைத் தான் வேண்டிக்கொள்ள அறிவு தூண்டியதே என்று வருந்தினார்.ஆனால் அதற்கு ஈடாகத் தன் கர்ப்ப காலத்தில் சதா தன் ஆன்மீக விழிப்புணர்வை செலுத்தித் தன் வயிற்றில் வளரும் கருவை வளர்த்தார்.***"அழியா ஆன்மீகச் செல்வத்தை உலகிற்கு அளிக்கும் மகவு என் குழந்தை!"*** - இதுவே அவரது கர்ப்பகால சங்கல்பம்.

**உண்மையான தம்பதியினர்**

தம்பதிகள் தெய்வத்தின் அருளால் ஆண் மகவைப் பெற்றனர்.அதுவே ஜெயதேவர்.தன் தந்தையையும் தாயையுமே ஆச்சாரியர்களாய்க் கொண்டு அவர் கல்வி-கேள்விகளில் தேர்ச்சி பெற்றார்.ஆன்மீகப் பாதையில் மிக நிதானமாகப் பயணம் செய்தார்.பெற்றோரின் ஆன்மீக அரவணைப்பில் முழுமையான ஞானத்தைப் பெறும் தகுதியை வளர்த்துக் கொள்கிறார்.உரிய வயதில் ஸ்ரீதேவ சர்மா என்பவரின் மகள் பதுமாவதியைக் கல்யாணம் செய்து கொண்டு இல்லறத்தை ஆரம்பித்தார்.கணவனுக்கு ஏற்ற ஆன்மீக ஞானத்தை அவரும் கொண்டு வாழ்ந்தார்.தெய்வீகத் தன்மையைத் தங்களுக்குள் சதா உணர்ந்து, தெளிந்து, கல்யாண வாழ்வின் உண்மையான லட்சியத்தைக் கைக்கொண்டு இவர்கள் வாழ்ந்தனர்.

ஜெயதேவர் வடிவில் வந்த ஜகன்நாதர்
அன்று எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் நாள்.ஜெயதேவர் நிதானமாக எண்ணெய் தேய்த்துக் கொண்டார்.திடீரென அவரது எண்ணம் முந்தைய தினம் இரவில் த்யானித்து இயற்றிய ராதாக்ருஷ்ண லீலையை விளக்கும் அஷ்டபதி ஒன்றில் லயித்த போது சற்று யோசித்தார்.

***"விரஹ தாபம் தீர்க்க ராதே! என் உச்சந்தலையில் உன் பாதத்தை வை!" என்று க்ருஷ்ணன் கூறுவதாக அல்லவா அடியேன் இயற்றினேன்? இது மிகவும் ஆபத்தான விஷயமாகிமே?! மிகவும் புலன் இச்சையை இறைவனே தூண்டுவதாகச் சமூஹம் கேலி செய்யுமே? இறைவனுக்கும் ராதைக்கும் இடையே ஆன அந்தரங்கம் இப்படி வெளிப்படுதல் தகுமோ?"*** - என்று யோசித்து அச்சுவடியைக் கிழித்து வீசிவிட்டு நீராடக் குளத்துக்குச் சென்றார்.

பதுமாவதி சமையல் அறையில் வேலையாய் இருக்கிறார்.சற்று நேரத்தில் மீண்டும் குளிக்காமலேயே தன் கணவர் வருவதைக் கண்டு காரணம் விசாரிக்கிறார்.பக்தியின் மேலீட்டால் மிக உன்னதமான ஒரு கருத்தை எழுத வேண்டும் என்று கூறி உடனே ஓலையை எடுத்து எழுதுவிட்டுச் சென்றார் மீண்டும்.

சற்று நேரத்தில் ஜெயதேவர் திரும்பினார்.பூஜைகளையும் உணவையும் முடித்துக் கொண்டு அஷ்டபதி இயற்ற உட்கார்ந்தார்.புதிய ஓலையில் தான் வேண்டாம் என்று ஒதுக்கிய கருத்தை இறைவன் மீண்டும் இயற்றியபோது வியந்தார்.***தன்னுள்ளும் எதனுள்ளும் இருந்து வ்யாபித்து அனைத்துமாகி அனைத்துச் செயலுமாகி இருப்பது ப்ரஹ்மமே என்பதை அவர் உணர்ந்தார்***.இதை மனைவியும் உணர்கிறார்.

ஜீவாத்மா பரமாத்மாவிடம் பிணைந்து இணைந்து ஐக்யம் ஆக எப்படிப்பட்ட வழியும் தேடிக்கொண்டு பக்தி செய்யலாம்.அந்தரங்க நாயக-நாயகி பாவ பக்தியில் எல்லைக்கோடே இல்லை.இதை அஷ்டபதி மூலம் இறைவன் உலகிற்கு உணர்த்துகிறார்.

**ஜகன்நாதர் கூறிய பதில்**
ஜெயதேவரின் பாடல்கள் மிகவும் ப்ரபலம் ஆயின.ஜனங்கள் அவற்றைக் கற்றும் பாடியும் பக்தி செய்தனர்.குறிப்பாக பூரியில் இறைவன் முன் அவை அதிகம் மக்களால் பாடப்படுவதை இறைவனின் ப்ரதிநிதியான பூஜாரிகள் ஊக்குவித்தனர்.

இதைப் பார்த்தான் பூரியை ஆளும் சிற்றரசன்.அவனும் பக்தன், அவனும் தெய்வீக ஸ்துதிகளை மிக்க ஸ்ரத்தையுடன் இயற்றுபவன்.ஆனால் அவனுடைய பாடல்களை மக்கள் அவ்வளவாக இயற்கையாக ஏற்றுப் பாடமுடியவில்லை.இதனால் மனம் வருந்திய மன்னன் ஜகன்நாதரை ப்ரார்த்தனை செய்தான்.

"மன்னன் என்ற அதிகார ஸ்தானத்தை மனதில் கொண்டு நீ எழுதியதை எல்லாம் மக்கள் ஏற்பர் என்ற கர்வம் உமக்கு உண்டு.அதனால் அதை மக்களுக்குள் அந்தர்யாமியாக இயங்கும் நான் ஏற்கவில்லை!ஜெயதேவரின் பூரண எளிய பக்தியைப் பின்பற்றுக." - என்றார் ஜகன்நாதர் விழிப்புணர்வில்.

தன் தவற்றை உணர்ந்த மன்னன் ஜெயதேவரைச் சென்று வணங்கி ஆதரவு தெரிவிக்க, அவரும் இவனது பாடல்களைத் தாமே பாடிச் சிறப்பு செய்தாராம்.இன்றும் பூரியில் மன்னனின் 13 பாடல்கள் சன்னிதிக்குள் பாடும் வழக்கம் உண்டு.

**சமாதி யோகம் பயின்ற ஜெயதேவர்**

தன் மருமகனின் புகழ் தேசமெல்லாம் பரவிடக் கண்டார் பதுமாவதியின் அப்பா.தம்பதியினருடன் சில காலம் தங்கி சத்சங்கம் பெற வேண்டி பில்வகாம் வந்தார்.அக்கட்டத்தில் சமாதி யோகம் பயின்ற ஜெயதேவர் மாமனாரின் வரவால் மகிழ்கிறார்.மாமனார் தங்கியிருந்த காலத்தில் காட்டுக்குள் சென்று சமாதி யோகம் பயில முற்பட்டார்.

**முன் ஜென்ம வினையைத் தீர்த்துக் கொண்ட ஜெயதேவர்**

அன்று பூரியில் வியாபாரம் செய்யும் ஒரு பக்தர் ஜெயதேவர் வீட்டுக்கு வருகிறார்.அவர் தான் ஸ்ரீபகவான்தாஸ்.அவர் ஜெயதேவரை மானசீக குருவாக ஏற்றுக்கொண்டு ஆன்மீகப் பயிற்சி மேற்கொள்கிறார்.ஜெயதேவரையும் பதுமாவதியும் தன் க்ராமத்துக்கு அழைத்துச் சென்று மரியாதை செய்ய எண்ணினார்.

ஜெயதேவரும் அவரது அழைப்புக்கு ஏற்ப அங்கு சென்று சில நாட்கள் தங்கினார்.அவ்வியாபாரியின் குடும்பத்துக்கும் ஊர் மக்களுக்கும் ஆன்மீக வழிமுறைகளைத் தன் ப்ரவச்சனம் மூலம் வாரி வழங்கினார்.குரு தஷிணையாய் அவருக்கு மக்களும் வ்யாபாரியும் பல பரிசுகளை அளித்தனர்.அவற்றை ஏற்றுக் கொண்டு ஒரு ரதத்தில் தன் ஊருக்கு இரவில் பயணம் மேற்கொள்கிறார் ஜெயதேவர்.

வழியில் ஒரு கொள்ளைக்கார கும்பல் ரதத்தை வழி மறைத்தது.ரதத்தை ஓட்டுபவர் பயந்து ஓட, ஜெயதேவரும் பொருளாசையை விடும் தருணம் இது என அமைதியாய் இறங்கி நடக்கத் தொடங்கினார்.ரதத்தில் உள்ள பொருளைக் கொள்ளை அடித்த கள்வர்கள் ஜெயதேவரைப் பிடித்து கைகளையும் கால்களையும் வெட்டி ஒரு கிணற்றுக்குள் வீசிச் சென்று விடுகிறார்கள்.

தன் முன் ஜென்ம வினைப் பயன் அது என உணர்ந்த ஜெயதேவர் வலியைத் தாண்டி தன் உடலையும் மனதையும் மறந்து பூரண விழிப்புணர்வில் சதா ஜகன்நாதரின் புகழ் பாடிக் கொண்டே மயங்கினார்.கைகளும் கால்களும் துண்டிக்கப்பட்டன என்பதை அவரது வினைகள் களையப்பட்டன என்று கொள்ள இடம் உண்டு.

இந்த நிலையில் அவர் அருளிய அழகிய தசாவதார அஷ்டபதிதான் ”ப்ரளய பயோதி ஜலே” ஆகும்.மயக்க நிலை கடந்த சமாதி யோகத்துள் சென்று உடல் உணர்வை மறந்தார் ஜெயதேவர்.

பதுமாவதியும் தன் கணவன் இன்னும் ஊர் திரும்பாததை எண்ணி வருந்துவார், ஜகன்நாதரை வேண்டுவாள்.இப்படியே சில வாரங்கள் போயின.

**க்ரவுஞ்ச தேசத்தில் ஜெயதேவர்**

பூரிக்கு அருகில் உள்ள சிறிய தேசம் க்ரவுஞ்சம்.அதன் மன்னன் சிறந்த சிவ பக்தன்.அவன் வேட்டைக்கு வந்த சமயத்தில் தாகம் தீர்க்கத் தண்ணீர் தேடிய வேளையில் வெற்றுக் கிணற்றுள் ஜெயதேவரைக் கண்டான்.மனம் உடைந்து, வருந்தி அவரை மீட்டுத் தன் தேசத்துக்கு இட்டுச் சென்றான்.உரிய மருத்துவ சிகிச்சை அளித்தான்.அவரை யார் என்று உணர்ந்து மகிழ்ந்த அவன் அவரது ஆன்மீக நெறிகளையும் ஏற்றுக் கொண்டான்.பதுமாவதி அம்மையாரை அழைத்து வந்து ஜெயதேவருடன் சேர்த்தான்.கணவனின் நிலையைக் கண்டு கலங்கித் துடித்த அம்மையாரை வினை பற்றிய பாடம் அமைதிபெற வைத்தது.அந்நிலையை ஜகன்நாதரின் ப்ரசாதமாக ஏற்றுக் கொள்கிறாள்.

**கள்வருக்கும் இரங்கிய ஜெயதேவர்**

அன்று சிவராத்ரி.க்ரவுஞ்ச மன்னன் தன் அரண்மனையில் அடியார்களுக்கு அன்னமும் பற்பல தானங்களும் அளிப்பது வழக்கம்.அன்று ஜெயதேவரிடம் கொள்ளை கொண்டு அவரை முடமாக்கிய கள்வர்களும் சாதுக்களாய் வேஷம் போட்டுக் கொண்டு யாசகம் கேட்டு வருகின்றார்கள்.

**வினையை மன்னித்த ஜெயதேவர்**

ஆனால் அன்னதானக் கூடத்தில் ஜெயதேவரைக் கண்டதும் மிரண்டனர்.இதனால் பயந்து ஒதுங்கினர்.ஆனால் ஜெயதேவர் அவர்களை அழைத்து உரிய தானம் தந்ததுடன், அவர்களது மன உலைச்சலை உணர்ந்தார்.அவர்களின் அறியாமையால் ஏற்பட்ட தீவினையை ஏற்று மன்னித்தார்.அவர்களை பத்திரமாக வழி அனுப்பும் படி சில வீரர்களிடம் கூறினார்.

**பூமி விழுங்கிய கள்வர்கள்**

காவலர்களுக்கு ஒரே வியப்பு!

"சாதுக்களே! ஜெயதேவ ஸ்வாமியை முன்னமே தெரியுமா? மிக்க பாக்யசாலிகள் நீங்கள்!" என்று கூற, தீவினையின் வேகமும் பலனும் உடனே வர அவர்கள் கூறினர்,

"***இவனா!? இவன் பக்காத்திருடன்! எங்கள் அரசனின் நகைகளைக் கொள்ளை கொண்டவன்.அதனால் தான் இவனை முடமாக்கி தண்டித்தோம்.இவன் போலி***!" என்று கூறியதும் பூமி பிளந்து அவர்களை விழுங்கிக் கொண்டது.

**கள்வர்களுக்கு உயர் பிறவி வேண்டிய ஜெயதேவர்**

கள்வர்கள் இறந்த செய்தியை அறிந்த ஜெயதேவர் பூரண பக்தியுடன் சிவனை வணங்கினார்.கள்வர்கள் தனக்கு முன்வினைப் பயனைத் தீர்த்துக் கொள்ள வழிசெய்ததை எண்ணி அவர்களுக்கு உயர்ந்த விழிப்புணர்வுடன் கூடிய பிறவியை அளிக்க வேண்டினார்.இவரது கருணையை மன்னனும் மக்களும் எண்ணி எண்ணி வியந்தனர்.

**பதிவ்ரதை யார்?**

அரசனுடன் அரண்மனையில் வசிக்கும் காலத்தில் ஜெயதேவரின் மனைவி அரண்மனை அரசிக்கும் பிற பெண்களுக்கும் சேவகர்களுக்கும் ஆன்மீகப் பேருரைகள் செய்வது வழக்கம்.அன்று ஒரு நாள் வழக்கம் போல் ஆன்மீக சத்சங்கம் ஆரம்பித்து "யார் பதிவ்ரதை?" என்ற கேள்விக்கு விளக்கம் காண முற்பட்டபோது சில கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன.

***"கணவன் உயிர் விட்டான் என்று கேட்ட போதே உயிர் விடுபவள் மிக உயர்ந்த பதிவ்ரதை"*** - இது பதுமாவதி அளித்த விளக்கம்.ஆனால் இதை நுட்பமாக ஆராய்ந்து யோசிக்கவில்லை என்றால் வீண் சர்ச்சை கிளம்பிவிடும்.

**பக்குவம் அறிந்து அறிவுரை சொல்!**

கணவன் என்பது உடலால் ஆன ஆண் மகனா? இல்லை.கணவன் என்பது ப்ரஹ்ம தத்வம் - புருஷ தத்வம்.அது இல்லாத நம் ஜீவன் சவத்துக்குச் சமம்.ப்ரஹ்மத்துடன் ஆன்மீக உணர்வால் இணைந்திருக்காத ஒவ்வொரு நொடியும் நாம் சாகிறோம்.

இதை உணர்த்தத் தவறினார் பதுமாவதி.அதனால் அவருக்கே வினை ஏற்பட்டது.கருத்து வேறுபாட்டால் மிகவும் கோபம் கொண்ட அரசி ஜெயதேவரின் மேச் சட்டையில் கோழியின் ரத்தத்தைத் தோய்த்து அதைப் பதுமாவதியிடம் காட்டி கணவரைக் கள்வர்கள் கொலை செய்தனர் என்றாள். அதைக் கேட்ட உடனே பதுமாவதி இறந்தாள்.இதனால் அரசி பயந்தார், கொலைப் பழிக்கு அஞ்சினார்.இவ்விஷயம் ஊருக்குள் பரவி அரசனின் காதுக்கும் எட்டியது.

**மனைவிக்கு உயிர் ஊட்டிய ஜெயதேவர்**

ஜெயதேவரின் தெய்வீக கானம் மனைவியை உயிர்ப்பிக்கும் என்று அனைவருக்கும் தெரியும்.ஆனால் அவர் அமைதியாக இருக்கிறார்.காரணம் எப்படியும் ஒருநாள் சாகும் மனைவியை உயிர்ப்பிக்கத் தன் ஜீவசக்தியையும் பூஜை-பக்தி சக்திகளையும் இழக்க வேண்டுமா என்று அவர் யோசிக்கிறார்.மேலும் அதன் மூலம் மனைவி மீதான பற்றை அறுக்க அவர் முற்பட்டார்.ஆனால் அவரது பற்றற்ற தன்மையின் பலனால் மக்கள் மூலம் ஜகன்நாதர் அவரைப் பாடும் படி தூண்டிட, இவரும் பாட பதுமாவதி உயிர்த்தெழுந்தாள்.

**காசி விஸ்வநாதர் செய்த ஆராய்ச்சியும் தீர்ப்பும்**

ஜெயதேவரும் மனைவியும் பாரத தேசத்தின் பல பாகங்களுக்கும் சென்று ஆன்மீகப் பணி செய்ய விரும்பினர்.அரசனின் அனுமதியுடன் முதலில் காசிக்குச் சென்று தன் ஆன்மீக இலக்கியங்களைப் பண்டிதர்கள் முன்னிலையில் தரம்பார்க்க விரும்பினார்.தனது ச்ருங்காரக் கவி நயம் மிக்க இலக்கியங்கள் மக்களுக்கு நன்மை செய்யுமா என்று அவருள் சதா ஐயம் இருந்து கொண்டே வருகிறது.

காசியில் மிகவும் தெளிந்த ஞானம் உள்ள பண்டிதர்கள் அவரது இலக்கியங்களைப் படித்தனர், ஆராய்ந்தனர்.அவரது உள்நோக்கம் பக்தியை ச்ருங்காரம் மூலம் சொல்வதே என்பதைத் தெரிந்து கொண்டு விஸ்வநாதர் முன் வைத்துப் பூஜித்தனர்.இறைவன் உரிய சகுணத்தைக் காட்டி அவை பக்தி உணர்வை ஏற்படுத்தும் என்று உணர்த்தினார்.

அதன் பின் ஜெயதேவரும் மனைவியும் சதா ஹரிநாம சங்கீர்த்தனமும் ஶ்ரீமத்பாகவத ப்ரச்சாரமும் மேற்கொண்டனர்.படிக்காத ஜனங்களும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் அவர் ஶ்ரீமத்பாகவத்தை எழுதினார்.

தம்பதியினர் தாம்பத்யத்தின் உண்மையான லட்சியத்தை ஆன்மீகம் மூலம் தம் கால முடிவில் அடைந்து முக்தி பெற்றனர்.

**பூரி ஜகன்நாதரும் ஸ்ரீரங்கநாதரும்**

பூரியிலும் ஸ்ரீரங்கத்திலும் ஸ்வாமி தேருக்குப் புறப்பட்டுச் செல்லும் போது வாத்தியம் மூலம் மிக அற்புதமாக ஜெயதேவரின் கீதகோவிந்தம் வாசிக்கப் படுகின்றது.இதன் மூலம் இரு பெரும் க்ஷேத்ரங்களின் தெய்வங்களும் அவரது உயர்ந்த தூய பக்தியை ஏற்றுக் கொண்டதை நாம் உணரலாம்.

தெய்வீகக் காதலைத் தங்கள் தாம்பத்யத்தில் பொருத்திப் பார்த்து ஆன்மீகப் பயிற்சி செய்யும் எவரும் இவர்தம் கதியை அடையலாம்!

ஹரி ஓம்!